# அஹ்மதிய்யா முஸ்லிம் ஜமாஅத்தின் உலகளாவிய தலைவர்
## ஹஸ்ரத் ஐந்தாவது கலீஃபத்துல் மஸீஹ் (அய்யதஹுல்லாஹுத்தஆலா பினஸ்ரிஹில் அஸீஸ்)
## அவர்கள் இலண்டனிலுள்ள பைத்துல் ஃபுதூஹ் பள்ளிவாசலில்
## 30.01.2009 அன்று ஆற்றிய ஜுமுஆ பேருரை

**தஸஹ்ஹுத் தஅவ்வுது மற்றும் சூரா ஃபாத்திஹா ஓதிய பிறகு ஹுஸூர் அவர்கள் கூறினார்கள்:**

ஹஸ்ரத் மஸீஹ் மவ்வூது (அலை) அவர்கள் தனது எஜமானரான ஹஸ்ரத் முஹம்மத் முஸ்தஃபா (ஸல்) அவர்களைப் பின்பற்றியதனால் கிடைத்துள்ள உயர்வான தகுதி குறித்து ஒவ்வொரு அஹ்மதிக்கும் தெளிவாகத் தெரியும். கடந்த குத்பாவில் இறைவனின் பண்பாகிய காஃபி (போதுமானவன்) என்பதைப் பற்றி நான் கூறியிருந்தேன். ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் மீது ஹஸ்ரத் வாக்களிக்கப்பட்ட மஸீஹ் (அலை) அவர்கள் கொண்டிருக்கும் உயர்வான பேரன்பின் காரணமாக அவர்கள் அல்லாஹ்வுக்கும் மிக அதிகமாக பிரியமானவர்களாக ஆகிவிட்டார்கள். அரபியிலும், உருதுவிலும், ஃபார்ஸியிலும் அவர்களுக்கு இறங்கியுள்ள எண்ணற்ற இல்ஹாம்களில் இறைவன் இதற்கு சாட்சி பகர்ந்துள்ளான். அஹ்மதிய்யா முஸ்லிம் ஜமாஅத்தின் மீது உதயமாகின்ற ஒவ்வொரு நாளும் ஹஸ்ரத் வாக்களிக்கப்பட்ட மஸீஹ் (அலை) அவர்களுக்கு இறங்கியுள்ள இல்ஹாம்கள் நிச்சயமாக உண்மையானதாக இருக்கின்றது என்பதையும் அவர்களது வாதமும் நிச்சயமாக உண்மையானது என்பதையும் நிரூபித்துக் கொண்டிருக்கின்றது.

அல்லாஹ்வின் மீது இட்டுக்கட்டிப் பொய்யை புனைந்து கூறுபவர் – அதுவும் குறிப்பாக இறைவன் தன்னை நபியாக அனுப்பியுள்ளான் என்று இட்டுக்கட்டிப் பொய் கூறுபவர் ஒருபோதும் இறைவனின் பிடியிலிருந்து தப்ப முடியாது. அல்லாஹ் இது பற்றி திருக்குர்ஆனில் குறிப்பிட்டுக் கூறியுள்ளான்.

**சூரா அல்ஹாக்காவில் அல்லாஹ் கூறுகின்றான்:**

*“இது உலகங்களின் இறைவனிடமிருந்து இறக்கப்பட்டதாகும்.*

*அவர் எந்தச் சொல்லையேனும் பொய்யான வெளிப்பாடாக எம்மீது சுமத்தியிருந்தால், நிச்சயமாக நாம் அவரை எம் வலக்கையால் பிடித்திருப்போம்.*

*பின்னர் நிச்சயமாக நாம் அவருடைய கழுத்துப் பெருநரம்புக் குழாயைத் துண்டித்திருப்போம். உங்களுள் எவராலும் அவரை (எம்முடைய தண்டனையிலிருந்து) காப்பாற்ற இயலாது.” (69:44-48)*

அல்லாஹ்வின் மீது இட்டுக்கட்டி பொய் கூறுபவரின் முடிவு தொடர்பாக இறைவன் கூறியுள்ள அடிப்படையான ஒரு அளவுகோலாக இது இருக்கின்றது. இந்த அளவுகோலைத்தான் ஹஸ்ரத் வாக்களிக்கப்பட்ட மஸீஹ் (அலை) அவர்கள் தனது உண்மைக்கு சான்றாக எடுத்துக் கூறியுள்ளார்கள்.

**ஹஸ்ரத் வாக்களிக்கப்பட்ட மஸீஹ் (அலை) அவர்கள் கூறுகின்றார்கள்:**

ஒரு உண்மையாளருக்கு இறைவன் ஒரு அடையாளத்தை எடுத்துக் கூறியுள்ளான். ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களைப் பார்த்து அல்லாஹ் இவ்வாறு கூறுகின்றான். நீர் என் மீது இட்டுக்கட்டிப் பொய் கூறினால் நான் உன்னை எனது வலக்கையால் பிடிப்பேன். இறைவன் மீது இட்டுக்கட்டிப் பொய் கூறுபவர் வெற்றி பெற முடியாது. மாறாக, அவர் அழிந்து விடுவார். இறைவன் எனக்கு அறிவித்துள்ள வஹி(இறை அறிவிப்பு)களை வெளியிட்டுக் கொண்டிருந்தேன். அவ்வாறு நான் வெளியிட ஆரம்பித்ததிலிருந்து இன்றுவரை 25 வருடங்கள் கடந்து விட்டன. நான் இறைவன் மீது இட்டுக்கட்டிப் பொய் கூறியிருந்தால் அதற்கெதிரில் இறைவனும் தனது வாக்குறுதியை நிறைவேற்ற வேண்டியது அவசியமானதாகும். அவன் என்னை பிடிப்பதற்குப் பதிலாக எனக்கு ஆதரவாக நூற்றுக்கணக்கான அடையாளங்களை வெளிப்படுத்தியுள்ளான். உதவிக்கு மேல் உதவி அவனிடமிருந்து எனக்கு கிடைத்துள்ளது. இறைவன் மீது

இட்டுக்கட்டிப் பொய் கூறுபவருடன் இவ்வாறுதான் இறைவன் பரிமாறுவானா? தஜ்ஜால்களுக்கு இப்படிப்பட்ட உதவிகள்தான் கிடைக்குமா? கொஞ்சமாவது சிந்தியுங்கள். எனக்கு இருந்து வரும் இறை உதவிகளுக்கு இணையாக ஒன்றை கொண்டுவந்து காட்டுங்கள். உங்களால் ஒருபோதும் அவ்வாறு காட்ட முடியாது என்பது எனது வாதமாகும்.

**ஹஸ்ரத் வாக்களிக்கப்பட்ட மஸீஹ் (அலை) அவர்கள் கூறுகின்றார்கள்:**

நீ சிலவற்றையேனும் என் மீது இட்டுக்கட்டிப் பொய் கூறினால் நான் உனது கழுத்து பெருநரம்புக் குழாயைத் துண்டித்திருப்போம் என்று இறைவன் ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களைப் பார்த்து கூறுகின்றான். இதையே **லவ் தகவ்வல அலைனா பஃஸல் லகதஃனா மின்ஹுல் வதீன்** (69:44-47) என்ற வசனம் எடுத்துக் கூறுகிறது. இங்கோ கடந்த 24 வருடங்களாக இறைவன் மீது இட்டுக்கட்டி நான் பொய் கூறி வந்திருந்தால் இறைவன் தனது பழைமையான நடைமுறையை கைவிட்டிருப்பானா? தீமையைச் செய்வதிலும் பொய் கூறுவதிலும் ஒருபோதும் ஒருவர் தொடர்ந்து நிற்க முடியாது. இறுதியில் மனிதன் இந்த ஏமாற்றுவேலையை விட்டு விடுகின்றான். ஆனால், கடந்த 24 வருடங்களாக இந்தப் பொய்யில் நிலைத்திருக்கும் வகையில் எனது இயல்பு மட்டும்தான் இருக்கின்றதா? நான் தொடர்ந்து இதைக் கூறி வருகின்றேன். ஆனால் அதற்கெதிரில் இறைவன் அமைதியாக இருக்கின்றானா? மேலும் உதவிக்கு மேல் உதவியை அவன் எனக்கு வழங்குவானா? முன்னறிவிப்புகளைச் செய்வது அல்லது மறைவான செய்திகளை பெற்றுக்கொள்வது ஆகியவை ஒரு சாதாரண இறைநேசரால் கூட முடியாத ஒரு பணியாகும். கண்ணியத்திற்குரிய இறைவனிடத்தில் தனிப்பெரும் அந்தஸ்தையும் கண்ணியத்தையும் பெற்றவர்களாலேயே இதை செய்ய முடியும்.

**ஹஸ்ரத் வாக்களிக்கப்பட்ட மஸீஹ் (அலை) அவர்கள் கூறுகின்றார்கள்:**

“எவராவது இறைவன் மீது இட்டுக்கட்டிப் பொய் கூறினால் அவர் அழிக்கப்படுவார். ஏன்? இதில் ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களின் சிறப்புத்தன்மை வைக்கப்பட்டுள்ளது. ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் இறைவன் மீது இட்டுக்கட்டி எதையாவது கூறியிருந்தால் அவர்களை மட்டும் பிடித்து தண்டித்து விட்டு அவ்வாறே வேறு ஒருவர் இறைவன் மீது இட்டுக்கட்டி பொய் கூறினால் அதைப் பொருட்படுத்தாமல் இறைவன் விட்டுவிட என்ன காரணம் இருக்க முடியும்? நவூதுபில்லாஹ். இப்படிப்பட்ட விஷயத்தில் அமைதி சீர்குலைந்து விடும். உண்மையாளருக்கும் இறைவன் மீது இட்டுக்கட்டிப் பொய் கூறுபவருக்கும் இடையில் எவ்வித வித்தியாசமும் இல்லாமல் ஆகிவிடும்.”

ஹஸ்ரத் வாக்களிக்கப்பட்ட மஸீஹ் (அலை) அவர்களுக்கு எதிராக ஆட்சேபனை செய்பவர்கள் இந்த (69:44-48) வசனம் ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களுக்கு மட்டும்தான் பொருந்தும் என்றே கூறுகின்றார்கள்.

அதற்குப் பதில் கூறும் வகையில்தான் ஹஸ்ரத் வாக்களிக்கப்பட்ட மஸீஹ் (அலை) அவர்கள், ‘ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் இறைவன் மீது இட்டுக்கட்டி எதையாவது கூறினால் மட்டும் இறைவன் அவர்களைப் பிடித்து விடுவான். வேறு எவரும் எதை வேண்டுமானாலும் இறைவன் மீது இட்டுக்கட்டிப் பொய் கூறினாலும் இறைவன் அவரை எதுவும் செய்யாமல் விட்டு விடுவானா? அவரை எவ்விதத்திலும் தண்டிக்க மாட்டானா?’ என்று ஹஸ்ரத் வாக்களிக்கப்பட்ட மஸீஹ் (அலை) அவர்கள் கேட்கின்றார்கள். மேலும் இக்கருத்தையே அவர்கள் தனது உண்மைக்கு அளவுகோலாக வைத்துள்ளார்கள்.

எனவே, இந்த அளவுகோலின்படி நாம் ஒரு உண்மையாளரை இனங்கண்டு கொள்ள வேண்டும். அஸ்வத், அன்ஸி, முஸைலமா, கஸ்ஸாப் போன்ற பொய் நபிமார்களின் தீய முடிவு குறித்த வரலாறு இஸ்லாத்தில் பாதுகாப்பாக வைக்கப்பட்டிருக்கின்றது. இவ்வாறெல்லாம் இருந்தும் முஸ்லிம்கள் ஹஸ்ரத் வாக்களிக்கப்பட்ட மஸீஹ் (அலை) அவர்களைப் பொய்ப்படுத்துவதில் ஈடுபட்டு வருகின்றார்கள். எனவே, திருக்குர்ஆன் மீது நம்பிக்கை வைத்திருப்பவர்களாவது குறைந்தபட்சம் அல்லாஹ்வின் வசனங்களை பரிகாசம் செய்வதிலிருந்தும் விலகியிருக்க வேண்டும்.

திருக்குர்ஆன் வசனங்கள் தொடர்பான ஞானம் தங்களுக்கு அதிகமாக இருப்பதாக வாதம் செய்கின்றவர்கள் தாங்களும் புரிந்து கொள்ளாமல் பிறரையும் புரிய விடாமல் தடுப்பது தொடர்பாக எடுத்துக்கூறியவாறு பைபிளிலும் பொய்யாக நபி என வாதிப்பவர்கள் கொல்லப்படுவார்கள் என வந்துள்ளதை சுட்டிக்காட்டியவாறு ஹஸ்ரத் வாக்களிக்கப்பட்ட மஸீஹ் (அலை) அவர்கள் இவ்வாறு கூறினார்கள்:

இறைவனது எல்லா தூய நூல்களும் கூறுகின்ற ஒருமித்த கருத்து என்னவென்றால், பொய்யாக நபி என்று வாதிப்பவர்கள் அழிக்கப்படுகின்றார்கள். எனவே, இதற்கு எதிரில் பேரரசர் அக்பர், தான் நபி என்று வாதம் செய்தார் அல்லது ஜலந்தரைச் சேர்ந்த ரோஷன் தீன் என்பவர், தான் நபி என்று வாதம் செய்தார் அல்லது வேறு ஒரு நபர் நபி என்று வாதம் செய்தார். ஆனால், இவர்களெல்லாம் அழிந்து போகவில்லை என்றெல்லாம் இவர்கள் கூறுவது இவர்கள் வெளிப்படுத்திக் காட்டுகின்ற இரண்டாவது முட்டாள்தனமாகும். இவர்கள் நபி என்று வாதம் செய்தார்கள் என்பது உண்மை என்றால் மேலும் நபி என்று வாதம் செய்த பிறகிலிருந்து 23 வருடங்களுக்குள் இவர்கள் அழியாமல் இருந்திருந்தால் அவர்கள் நபி என்று பொய் வாதம் செய்ததாக கூறுபவர்கள் அவர்களது எழுத்துக்களிலிருந்தும் அவர்களது வாதத்தை நிரூபித்துக் காட்ட வேண்டும். மேலும் இறைவன் அவர்களுக்கு அறிவித்ததாக அவர்கள் மக்களுக்கு எடுத்துக் கூறியுள்ள அவர்களுக்கு இறக்கியுள்ள இல்ஹாம்களையும் இவர்கள் காட்ட வேண்டும். அதாவது இந்த சொற்களில் என் மீது வஹி இறங்கியது என்று அவர்கள் கூறியிருப்பதைச் சுட்டிக்காட்டும் வகையில் அவர்களுக்கு வந்த வஹியின் சொற்களை முழுமையான ஆதாரத்துடன் இவர்கள் எடுத்து வைக்க வேண்டும். ஏனென்றால், நமது அடிப்படையான வாதம் நபித்துவம் தொடர்பான வஹி பற்றியதாகும். அதற்கு சில வசனங்களை எடுத்துக்கூறி இது இறைவன் என்னிடம் கூறிய வசனங்களாகும் என்று கூற வேண்டியது அவசியமானதாகும். மேலும் இது எங்கள் மீது இறங்கியுள்ளது என்றும் அவர்கள் கூற வேண்டும்.

**ஹஸ்ரத் வாக்களிக்கப்பட்ட மஸீஹ் (அலை) அவர்கள் கூறுகின்றார்கள்:**

தான் நபி என்று வாதம் செய்தவர் அதை நிரூபிக்கும் வகையில் இறைவன் தனக்கு இறக்கியிருப்பதாக எந்த இறைவசனங்களை எடுத்துக் கூறியுள்ளார் என்பதை பார்க்க வேண்டும். பிறகு 23 வருடங்களாக அவர் மீது இறங்கியுள்ள இறைவசனங்கள் எவை? இறைவனது வசனங்கள் எவர்கள் மீது இறங்கியதோ அவர்கள் அதனை முழுமையாக மக்களுக்கு கேட்கும்படி கூறியிருந்தால் அவை என்ன? என்பதை எடுத்து வைக்க வேண்டும். அதிலிருந்தும் 23 வருடங்களாக பல்வேறு சமயங்களில் அவை இறைவசனங்கள் என்ற அடிப்படையில் மக்களுக்கு எடுத்துக் கூறப்பட்டிருப்பது தெரிய வரும். திருக்குர்ஆன் ஒட்டுமொத்தமாக இறைவனது வசனம் என்ற வகையில் நூல் வடிவில் வெளியிட்டிருப்பது போன்று தம்மை நபி என்று வாதம் செய்பவர்களுக்கு வந்துள்ள இறைவசனங்களும் நூல் வடிவில் வெளியிடப்பட்டிருக்க வேண்டும். அது தம் மீது இறக்கப்பட்டதாக அவர்கள் தெரிவிக்க வேண்டும். எதுவரை இதற்கான ஆதாரத்தை அவர்கள் தருவதில்லையோ அதுவரை ஈமான் இல்லாதவர்கள் போன்று திருக்குர்ஆன் மீது இவர்கள் தொடுக்கும் தாக்குதலும், வலவ் தகவ்வல என்ற (69:44-48) வசனத்தை எள்ளி நகையாடி பரிகாசம் செய்வதும் இந்த தீயவர்களின் பணியாக இருக்கின்றது. ஏனென்றால், இவர்களுக்கு இறைவன் மீதே நம்பிக்கையில்லை. நாவளவில் இவர்கள் கலிமாவை கூறுகின்றார்கள். ஆனால், உள்ளத்தால் இவர்கள் இஸ்லாத்தை மறுப்பவர்களாகத்தான் இருக்கின்றார்கள். தனக்கு கிடைத்துக் கொண்டிருக்கும் இறை உதவிகள் மற்றும் எதிரிகளின் எதிர்ப்பிற்கு எதிரில் இறைவன் தனக்கு போதுமானவனாக இருக்கின்றான் என்பதைப் பற்றி குறிப்பிட்டவாறு ஹஸ்ரத் வாக்களிக்கப்பட்ட மஸீஹ் (அலை) அவர்கள் இவ்வாறு கூறுகின்றார்கள்:

ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களது வாழ்க்கையில் ஐந்து சந்தர்ப்பங்கள் மிகவும் இக்கட்டான சந்தர்ப்பங்களாக இருந்திருக்கின்றது. அப்படிப்பட்ட சந்தர்ப்பங்களில் தனது உயிரைப் பாதுகாத்துக் கொள்வது கூட நடக்க முடியாத ஒன்றாகத்தான் தெரிகிறது. ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் இறைவனின் உண்மையான தூதராக இல்லையென்றால் நிச்சயமாக அவர்கள் அழிந்து போயிருப்பார்கள். முதலாவது சந்தர்ப்பம் குரைஷியர்களான காஃபிர்கள் ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களது வீட்டை முற்றுகையிட்டவாறு இன்று நாங்கள் கண்டிப்பாக முஹம்மதை கொன்று விடுவோம் என்று சத்தியம் செய்து

கொண்ட அந்த இக்கட்டான சந்தர்ப்பமாகும். இரண்டாவதாக, அவர்களது வாழ்வில் அவர்கள் சந்தித்த இக்கட்டான சந்தர்ப்பமானது காஃபிர்கள் ஒரு பெரும் எண்ணிக்கையில் ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள், ஹஸ்ரத் அபூபக்கர் (ரலி) அவர்களுடன் மறைந்திருந்த அந்த குகையைச் சென்றடைந்த சந்தர்ப்பமாகும். மூன்றாவது சந்தர்ப்பம் உஹத் போர்க்களத்தின்போது ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் தனித்து நின்றவாறு போர் புரிந்த சமயத்தில் காஃபிர்கள் அவர்களை முற்றுகையிட்டவாறு அன்னார் மீது பலமுறை வாளால் தாக்குதல் நடத்திய போதும் அதனால் எவ்வித பாதிப்பும் ஏற்படாமல் இருந்த சந்தர்ப்பமாகும். இது ஒரு அற்புதமாகும். நான்காவது சந்தர்ப்பமானது ஒரு யூதப் பெண்மணி ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் சாப்பிட்ட மாமிசத்தில் விஷத்தைக் கலந்து விட்ட சந்தர்ப்பமாகும். அந்த விஷம் கடுமையானதாகவும் மனிதனை அழிக்கக் கூடியதாகவும் இருந்தது. ஆனால் அல்லாஹ் ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களை அந்த விஷத்தின் தீய தாக்கத்திலிருந்து பாதுகாத்தான். ஐந்தாவது அபாயகரமான சந்தர்ப்பம் குஸ்ர் பர்வேஸ் என்ற பாரசீக அரசர் ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களை கொலை செய்வதற்காக உறுதியான எண்ணம் கொண்டவராக ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களை கைது செய்வதற்காக தனது சிப்பாய்களை அனுப்பி வைத்த அந்த சந்தர்ப்பமாகும். ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் இப்படிப்பட்ட அனைத்து அபாயகரமான சந்தர்ப்பங்களிலிருந்தும் தப்பித்து இறுதியில் அனைத்து எதிரிகள் மீதும் வெற்றியைப் பெற்றது அவர்கள் உண்மையாளர் என்பதற்கும் இறைவன் அவர்களுடன் இருந்தான் என்பதற்கும் ஒரு மகத்தான அடையாளமாக இருக்கின்றது.

இதைப்போன்றே தனக்கு அல்லாஹ் தனது உதவிகளை வழங்கி எவ்வாறு தன்னுடன் பறிமாறினான் என்பதைப் பற்றி விளக்கியவாறு ஹஸ்ரத் மஸீஹ் மவ்வூது (அலை) அவர்கள் கூறுகின்றார்கள்:

எனது வாழ்வும், எனது கண்ணியமும், எனது உயிரும் மிகப்பெரும் ஆபத்தில் இருந்த ஐந்து இக்கட்டான சந்தர்ப்பங்கள் வந்துள்ளன என்பது மிகவும் வியப்பிற்குரிய ஒரு விஷயமாகும். முதலாவது சந்தர்ப்பம் டாக்டர் மாட்டின் கிளார்க் எனக்கெதிராக கொலைக் குற்றத்தை சுமத்தி என்மீது வழக்கு தொடர்ந்த சந்தர்ப்பமாகும். இரண்டாவது சந்தர்ப்பம் போலீஸ் என் மீது குர்தாஸ்பூரின் டெபுடி கமிஷ்னரான மிஸ்டர் டோயி சாஹிப் முன்னிலையில் என் மீது தொடுத்த வழக்காகும். மூன்றாவது சந்தர்ப்பம் ஜெஹ்லம் என்ற இடத்தில் கரம்தீன் என்பவர் எனக்கு எதிராக தொடர்ந்த வழக்காகும். நான்காவது சந்தர்ப்பம் இதே கரம்தீன் குர்தாஸ்பூரில் எனக்கு எதிராக தொடர்ந்த வழக்காகும். ஐந்தாவது சந்தர்ப்பம் லேக்ராம் கொல்லப்பட்ட போது எனது வீடு சோதனையிடப்பட்ட சந்தர்ப்பமாகும். நான்தான் லேக்ராமை கொலை செய்தேன் என்பதை நிரூபிப்பதற்காக எதிரிகள் முழுமையாக முயற்சி செய்தனர். ஆனால், இந்த எல்லா வழக்கிலும் எதிரிகள் தோல்வியடைந்தார்கள்.

டாக்டர் மார்ட்டின் கிளார்க் ஹஸ்ரத் வாக்களிக்கப்பட்ட மஸீஹ் (அலை) அவர்களுக்கு எதிராக செயல்பட்டது ஜமாஅத்தின் வரலாற்றில் புகழ்பெற்ற ஒரு சம்பவமாக இருக்கின்றது. டாக்டர் மார்ட்டின் கிளார்க் தொடர்ந்த கொலை வழக்கில் ஹஸ்ரத் மஸீஹ் மவ்வூது (அலை) அவர்களுக்கு எதிராக இந்துக்களும், முஸ்லிம்களும், கிறிஸ்தவர்களும் கூட ஒன்றாக இணைந்து செயல்பட்டனர். இறுதியில் இறைவன் ஹஸ்ரத் வாக்களிக்கப்பட்ட மஸீஹ் (அலை) அவர்கள் எந்த குற்றமும் செய்யவில்லை என்பதை நிரூபித்துக் காட்டினான். இதுபற்றிய விஷயம் மிக நீளமானதாகும். ஹஸ்ரத் வாக்களிக்கப்பட்ட மஸீஹ் (அலை) அவர்களை பரிகாசம் செய்தவர்கள் அல்லது அன்னார் பரிகாசம் செய்யப்பட வேண்டும் என்று விரும்பியவர்கள் ஆகியோருடன் இறைவன் எவ்வாறு பரிமாறினான் என்பதை இந்த வழக்கில் நடந்த ஒரு சம்பவம் மூலம் நான் உங்கள் முன் வைக்கின்றேன். தனது எதிரியுடன் இறைவன் எவ்வாறு பரிமாறினான் என்பதைப் பற்றி ஹஸ்ரத் வாக்களிக்கப்பட்ட மஸீஹ் (அலை) அவர்கள் இவ்வாறு கூறுகின்றார்கள்:

உண்மையில் அந்த இறைவன் வல்லமையுள்ளவனும், ஆற்றல் மிக்கவனுமாவான். அவன் பக்கம் அன்புடனும், நம்பிக்கையுடனும் குனிபவர்கள் ஒருபோதும் வீணாக மாட்டார்கள். எனது திட்டங்கள் மூலம் இவரை நான் அழித்து விடுவேன் என எதிரி கூறுகின்றார். தீய எண்ணமுடையவர் இவரை நான் கொன்று

விடுவேன் என்ற எண்ணத்துடன் செயல்படுகின்றார். அப்போது இறைவன் அறிவற்றவனே! நீ என்னுடனா சண்டை போடுகிறாய்? எனது அன்பிற்குரியவரை உன்னால் இழிவுபடுத்த முடியுமா? என்று இறைவன் கேட்கின்றான். விண்ணில் எது முதலில் நடந்து விடுகிறதோ அதை தவிர வேறு எதுவும் இந்த பூமியில் நடப்பதில்லை. எந்த ஒரு பூமியின் கையும் விண்ணில் எந்த அளவு நீளமானதாக ஆக்கப்பட்டுள்ளதோ அதைவிட அதிகமாக பூமியில் நீளமானதாக ஆக முடியாது.

நான் டெபுடி கமிஷ்னரின் அலுவலகத்தில் சென்ற போது நான் செல்வதற்கு முன்பே அங்கு நான் உட்காருவதற்கான நாற்காலி போடப்பட்டிருந்தது. நான் அங்கு சென்றதும் டெபுடி கமிஷ்னர் அவர்கள் மிகவும் கண்ணியத்துடனும் அன்புடனும் நான் நாற்காலியில் அமரும்படி சைகை மூலம் தெரிவித்தார். நான் கைது செய்யப்படுவதையும் எனக்கு ஏற்படும் இழிவையும் பார்ப்பதற்காக வந்த முஹம்மத் ஹுஸைன் பட்டாலவியும் அவருடன் வந்திருந்த நூற்றுக்கணக்கான நபர்களும் இந்த காட்சியைக் கண்டு வியப்பில் ஆழ்ந்தனர். அதாவது இந்த நாள் இவரது இழிவுக்கும், தோல்விக்கும் உரிய நாளாக இருக்கும் என்று கருதப்பட்டது. ஆனால், இந்த நபர் மிகவும் கண்ணியத்துடன் நாற்காலியில் அமர்த்தப்பட்டுள்ளாரே என்று அவர்கள் வியப்படைந்தனர். தங்களது எதிர்பார்ப்பிற்கு எதிராக நீதிமன்றத்தில் எனக்கு வழங்கப்பட்ட கண்ணியத்தைக் கண்டதால் எனது எதிரிகளுக்கு ஏற்பட்டிருக்கும் இந்த வேதனை ஒன்றும் குறைவானதல்ல என்று நான் நினைத்தேன். ஆனால், இதை விட அதிகமாக அவர்களை இழிவுபடுத்த வேண்டும் என்பது இறைவனின் நாட்டமாக இருந்தது.

எனது உயிரின் மீதும் கண்ணியத்தின் மீதும் இன்று வரை தாக்குதல் நடத்தி வந்த எதிரிகளின்தலைவரான முஹம்மத் ஹுஸைன் பட்டாலவி அவர்கள் டாக்டர் கிளார்க்கிற்கு ஆதரவாக சாட்சி கூறுவதற்கு வந்தார். நீதிமன்றத்தில் இந்த நபர் டாக்டர் மார்ட்டின் கிளார்க்கை கொலை செய்வதற்காக அப்துல் ஹமீது என்ற நபரை இவர் அனுப்பி வைத்தது நிச்சயமாக நடந்த ஒரு சம்பவம்தான் என்பதை அவர் கூறவிருந்தார். அதற்காக நீதிமன்றத்தில் சாட்சி கூறுவதற்கு அவர் வந்த சமயத்தில் இவர் முஸ்லிம்களல்லாத மற்றவர்கள் மத்தியிலும் புகழ்பெற்ற ஒரு மனிதராவார். எனவே, அவர் அமர்வதற்கு நாற்காலி வழங்கப்பட வேண்டும் என முஹம்மத் ஹுஸைன் பட்டாலவிக்காக டாக்டர் மார்ட்டின் கிளார்க் டெபுடி கமிஷ்னரிடம் கேட்டுக்கொண்டார். ஆனால், டெபுடி கமிஷ்னர் அவர்கள் அவரது இந்த சிபாரிசை ஏற்றுக் கொள்ளவில்லை.

முஹம்மத் ஹுஸைன் அவர்களுக்கும் அவருக்கு நாற்காலி கிடைக்க வேண்டும் என்பதற்காக முதலில் பேசப்பட்ட விஷயங்கள் தொடர்பாக எதுவும் தெரியாது என்றே நான் நினைக்கின்றேன். அவர் அமர்வதற்க நாற்காலி கேட்டு வைக்கப்பட்ட கோரிக்கை ஏற்றுக் கொள்ளப்படவில்லை. அது நிராகரிக்கப்பட்டு விட்டது என்பது அவருக்கு தெரியவில்லை. அதனால் அவர் சாட்சி கூறுவதற்காக உள்ளே அழைக்கப்பட்ட போது தங்களை பெரிதாக பிறருக்கு காட்ட வேண்டும் என எண்ணுகின்ற பகட்டு முல்லாக்கள் போன்றே இவரும் நீதிமன்றத்திற்குள் வந்ததுமே மிகவும் பெருமையுடன் டெபுடி கமிஷ்னரிடம் தான் அமர்வதற்காக நாற்காலி வேண்டும் என்று கேட்டார். டிபடி கமிஸனர் அவர்கள் உங்களுக்கு நீதி மன்றத்தில் நாற்காலி கிடைக்காது எங்களால் நாற்காலி தர முடியாது என்று கூறினார். மீண்டும் நாற்காலி கிடைக்க வேண்டும் என்ற ஆசையில் தன்னை மறந்த நிலையில் எனக்கு நாற்காலி வழங்கப்பட்டிருக்கிறது. எனது தந்தையான ரஹீம் பக்ஸ் அவர்களுக்கும் நாற்காலி இதற்கு முன்னர் வழங்கப்பட்டுள்ளது என்று அவர் சொன்னார். இதை கேட்ட டிபடி கமிஸனர் அவர்கள் நீர் பொய்யர். உமக்கும் நாற்காலி வழங்கப்பட்டதில்லை. உமது தந்தையான ரஹீம் பக்ஸிக்கும் நாற்காலி கொடுக்கப்படவில்லை. நம்மிடம் உமது நாற்காலிக்கான எந்த விண்ணப்பமும் இல்லை என்று கூறினார். அதை கேட்ட முஹம்மத் ஹுஸைன் இதற்கு முன்னர் எனக்கு நாற்காலி வழங்கப்பட்டிருக்கிறது என்று மீண்டும் கூறினார். இந்த பொய்யை கேட்ட டிபடி கமிஸனர் கடுமையாக வெறுப்பை வெளிப்படுத்தியவாறு வீண் பேச்சு பேசாதே பின்னர் சென்று நேராக நில் என்று கூறினார். அப்போது எனக்கும் கூட முஹம்மத் ஹுஸைன் மீது கருணை ஏற்பட்டது. ஏனென்றால் மரணம் போன்ற நிலைமையில் அவர் இருந்தார். அவரது உடலை அப்போது வெட்டி பார்த்திருந்தால் இரத்தத்தின் ஒரு துளி கூட அதில் இருந்திருக்காது (அதாவது இரத்தம் உறைந்து போயிருக்கும் – மொழிபெயர்ப்பாளர்) அவருக்கு ஏற்பட்ட இந்த இழிவுக்கு இணையான வேறு ஒரு உதாரணம் எனது முழுவாழ்விலும் எனது நினைவில் இருந்ததில்லை.

அவர் அமைதியுடனும் கலக்கத்துடனும் அச்சத்துடனும் பின்னால் சென்றார். நேராக நின்றார். அவரது தலை மேஜையின் பக்கம் குனிந்திருந்தது. அப்போது உம்மை இழிவுபடுத்த விரும்புவரை நான் இழிவு படுத்துவேன் என்று இறைவன் எனக்கு அறிவித்த இல்ஹாம் எனக்கு நினைவில் வந்தது. இது இறைவனது வாயிலிருந்து வந்த சொற்களாகும். இதை சிந்திப்பவர்கள் அருளுக்குரியவர்கள்.

இதை தவிர இன்னா கஃப்பய்னகல் முஸ்தஹ்ஸிஈன் – உம்மை பரிகாசம் செய்பவர்களுக்கு எதிரில் நான் உனக்கு போதுமானவன் என்ற இல்ஹாமும் அவர்களுக்கு வந்துள்ளது. எந்த எதிரி ஹஸ்ரத் வாக்களிக்கப்பட்ட மஸீஹ் (அலை) அவர்கள் இழிவடைய வேண்டும் என்று ஆசைப்பட்டாரோ, எவர் இந்த வழக்கில் தீர்ப்பு கூறப்பட்ட பிறகு அவர்களுக்கு மோசமான நிலை ஏற்படுவதைப் பார்க்க வேண்டும் என்று விரும்பினாரோ, அவர்களை பரிகாசம் செய்வதற்கான சந்தர்ப்பத்தைத் தேடிக் கொண்டிருந்தாரோ அவரே அத்தகைய பரிகாசத்திற்கு இலக்காகி விட்டார். இதுதான் அல்லாஹ்வின் உதவிகளாகும்.

ஹஸ்ரத் வாக்களிக்கப்பட்ட மஸீஹ் (அலை) அவர்கள் பராஹீனே அஹ்மதிய்யா என்ற நூலை எழுதிய போது பல்வேறு நபர்களுக்கு அது தொடர்பாக கடிதம் எழுதியிருந்தார்கள். பொருளுதவி செய்யும்படி அதில் எழுதியிருந்தார்கள். அப்போது மிகப்பெரும் ஆலிமாக இருந்த நவாப் சித்தீக் ஹஸன் கான் சாஹிப் அவர்களுக்கும் இவ்வாறு ஹஸ்ரத் வாக்களிக்கப்பட்ட மஸீஹ் (அலை) அவர்கள் கடிதம் எழுதியிருந்தார்கள். இவர் போபாலைச் சார்ந்தவர். யமன் மற்றும் இந்தியாவிலுள்ள ஆலிம்கள் மூலம் மார்க்கக் கல்வியைப் பெற்றவராவார். போபால் பிரதேசத்தில் இவர் பணியாற்றி வந்தார். பணியில் முன்னேற்றமடைந்தவாறு அமைச்சராக அவர் பணியாற்றினார். ஷாஜஹான் பேகம் என்ற பெண்ணை திருமணம் செய்த பிறகு அந்த பிரதேசத்தின் முழு ஆதிக்கமும் இவரது கையில் வந்து விட்டது. பிரிட்டீஸ் அரசாங்கம் அவருக்கு நவாப் வாலாஜா, அமீருல் முல்க், முஹ்தமிருல் முஹாம் போன்ற கௌரவப் பெயர்களைச் சூட்டி சிறப்பித்தது. இவர் அஹ்லே ஹதீஸ் பிரிவுடன் தொடர்புடையவராக இருந்தார். இப்படிப்பட்ட உயர்வான பதவிகளும், அரசு தரப்பிலிருந்து கௌரவப் பெயர்கள் கிடைத்த பிறகும் கூட தனது எழுத்துக்கள் மூலம் அவர் இஸ்லாமிய தொண்டு புரிந்து வந்தார். ஓரளவு மார்க்கத்துடன் அவருக்கு தொடர்பு இருந்தது. ஹஸ்ரத் வாக்களிக்கப்பட்ட மஸீஹ் (அலை) அவர்களும் அவரை மிகவும் நல்லவர் என்றும் இறையச்சமுள்ளவர் என்றும் கருதினார்கள். பராஹீனே அஹ்மதிய்யாவின் முதல் பாகத்தை ஹஸ்ரத் வாக்களிக்கப்பட்ட மஸீஹ் (அலை) அவர்கள் வெளியிட்ட போது அதன் இரண்டாவது பதிப்பை வெளியிடுவதற்காக உதவி கோரி பலருக்கும் கடிதம் எழுதியிருந்தார்கள். நவாப் ஸித்தீக் ஹஸன் கான் சாஹிப் அவர்களுக்கும் இவ்வாறு ஹஸ்ரத் வாக்களிக்கப்பட்ட மஸீஹ் (அலை) அவர்கள் கடிதம் எழுதியிருந்தர்கள். முதலில் அவர் நல்லது. நாம் சில புத்தகங்களை வாங்குவோம் என நல்ல முறையில் கடிதத்திற்கு பதில் எழுதினார். ஆனால், அதற்குப் பிறகு எதுவும் செய்யாமல் அமைதியாக இருந்து விட்டார். இரண்டாவதாக, ஹஸ்ரத் மஸீஹ் மவ்வூது (அலை) அவர்கள் இதுபற்றி அவருக்கு நினைவூட்டியதும் மார்க்க விவாதங்கள் அடங்கியுள்ள நூல்களை வாங்குவது அல்லது அதற்காக உதவி செய்வது ஆங்கிலேய அரசாங்கத்தின் விருப்பத்திற்கு எதிரான செயலாகும். எனவே, இந்த பிரதேசத்திலிருந்தும் புத்தகம் வாங்குவது தொடர்பாக நீங்கள் எந்த நம்பிக்கையும் வைக்க வேண்டாம் என்று அவர் பதில் கடிதம் எழுதினார். ஹஸ்ரத் மஸீஹ் மவ்வூது (அலை) அவர்கள் ஆங்கிலேயரால் நடப்பட்ட செடி என்று எதிரிகள் கூறுகின்றனர். ஆனால், இவர்களது மிகப்பெரும் ஆலிம் ஆங்கிலேயர்களை மகிழ்விப்பதற்காக ஹஸ்ரத் வாக்களிக்கப்பட்ட மஸீஹ் (அலை) அவர்கள் எழுதிய நூலை வாங்க மறுத்து விட்டார். அந்த புத்தகம் இஸ்லாத்திற்கு எதிராக நடைபெறும் தாக்குதலைத் தடுப்பதற்காக எழுதப்பட்டதாகும். ஹாபிஸ் ஹாமித் அலி சாஹிப் (ரலி) அவர்கள் பார்த்ததும் அவர்களது முகம் கோபத்தால் நிறைந்திருந்தது. முகம் சிவந்து விட்டது. நல்லது. நீங்கள் உங்களது அரசாங்கத்தை மகிழ்வியுங்கள் என்ற சொற்கள் அவர்களது நாவிலிருந்து வெளிவந்தது. மேலும் அல்லாஹ் அவனது கண்ணியத்தைத கிழித்து விடட்டும் என்றும் அவர்கள் துஆ செய்தார்கள். அப்போது ஹஸ்ரத் வாக்களிக்கப்பட்ட மஸீஹ் (அலை) அவர்கள் நாமும் நவாப் சாஹிப் அவர்களை நமது நம்பிக்கைக்குரிய இடமாக ஆக்கவில்லை. மாறாக, நாம் கருணை காட்டும் நமது இறைவனையே நமது நம்பிக்கைக்குரிய இடமாக ஆக்கியுள்ளோம். அவனே நமக்கு போதுமானவனாக

இருக்கின்றான். ஆங்கிலேய அரசாங்கம் நவாப் சாஹிபிடம் மிக அதிகமாக திருப்தியடைய இறைவன் உதவி புரிவானாக என்று கூறினார்கள்.

பீர் அப்பாஸ் அலி சாஹிப் அவர்களுக்கு அந்த காலத்தில் ஹஸ்ரத் மஸீஹ் மவ்வூது (அலை) அவர்கள் ஒரு கடிதம் எழுதினார்கள். அதில் ஹஸ்ரத் வாக்களிக்கப்பட்ட மஸீஹ் (அலை) அவர்கள் இவ்வாறு எழுதியுள்ளார்கள்:

ஆரம்ப காலத்தில் பராஹீனே அஹ்மதிய்யா என்ற இந்த நூல் வெளியிடப்பட்ட நேரத்தில் அதற்காக பொருளுதவி செய்யுமாறு இஸ்லாமிய பிரதேசங்களிலிருந்து கடிதம் எழுதப்பட்டது. அத்துடன் புத்தகங்களும் அனுப்பப்பட்டது. மாலியர் கோட்லாவைச் சார்ந்த நவாப் ரஹீம் அலி சாஹிப், மஹ்மூத் கான் சாஹிப் போன்றோர் இதற்காக சிறிது பொருளுதவி செய்துள்ளனர். மற்றவர்கள் இது விஷயமாக கவனம் செலுத்தாமல் இருந்ததோடு மட்டுமல்லாமல் அவர்களில் எவராவது இதற்காக வாக்குறுதி தந்திருந்தாலும் கூட அதனை அவர்கள் நிறைவேற்றவில்லை. போபாலிலிருந்தும் நவாப் சித்தீக் ஹஸன் சாஹிப் அவர்கள் இதை கடுமையாக எதிர்த்து ஒரு கடிதம் எனக்கு எழுதினார். நீங்கள் இனி இந்த பிரதேசத்திலுள்ளவர்களை எதிர்பார்க்க வேண்டாம். கருணைமிக்க எஜமானனான நமது இறைவனே நமக்கு போதுமானவனாக இருக்கின்றான் என்பதை புரிந்து கொள்ளுங்கள். அலைஸல்லாஹு பி காஃபின் அப்தஹு – இறைவன் தன் அடியாருக்கு போதுமானவன் அல்லவா?

அல்லாஹ் ஹஸ்ரத் வாக்களிக்கப்பட்ட மஸீஹ் (அலை) அவர்கள் செய்த துஆவை எவ்வாறு ஏற்றுக்கொண்டான்? சிறிது காலம் கழிந்ததுமே ஆங்கிலேயர்களை மகிழ்விக்க நினைத்த நவாப் சித்தீக் ஹஸன் கான் சாஹிப் கண்ணியம் சிதைய ஆரம்பித்தது. அந்த ஆங்கிலேய அரசாங்கம்தான் நவாப் சாஹிபின் மீது பல்வேறு குற்றச்சாட்டுகளை சுமத்தி அது தொடர்பாக விசாரனை செய்ய ஒரு கமிஷனையும் நியமித்தது. அந்த விசாரனைக் கமிஷன் ஆங்கிலேய அரசுக்கு எதிராக கிளர்ச்சி செய்வதற்காக நவாப் சாஹிப் மக்களை தூண்டினார் என்று கூறியதுடன் அவருக்கு கொடுத்த எல்லா பட்டங்களையும் கௌரவப் பெயர்களையும் அவரிடமிருந்து பிடுங்கியது. அவரை மிகப்பெரும் ஆலிமாக நினைத்து அவருக்கு கண்ணியமளித்து வந்த முஸ்லிம்களும்கூட ஆங்கிலேய அரசாங்கத்திடம் அவருடன் இப்படி பரிமாறுவதுதான் நல்லது என்று கூற ஆரம்பித்தனர். எல்லா வகையிலும் அவரால் ஒன்றுமே செய்ய முடியாத நிலை ஏற்பட்ட போது பல்வேறு மக்கள் தரப்பிலிருந்தும் ஹஸ்ரத் மஸீஹ் மவ்வூது (அலை) அவர்களிடம் அவருக்காக துஆ செய்யும்படி சிபாரிசு செய்யப்பட்டது. ஹஸ்ரத் மஸீஹ் மவ்வூது (அலை) அவர்களும் அவருக்காக துஆ செய்தார்கள். அப்போது தலை வெட்டப்படுவதிலிருந்து தடுக்கப்பட்டு அவரது கண்ணியம் பாதுகாக்கப்பட்டது என்று நவாப் சாஹிப் தொடர்பாக அவர்களுக்கு இறையறிவிப்பு கிடைத்தது. லேக்ராமும் ஹஸ்ரத் மஸீஹ் மவ்வூது (அலை) அவர்களுக்கு ஒரு கடிதத்தை எழுதினார். அதில் நீங்கள் இறைவன் உங்கள் துஆக்களை கேட்கின்றான் என்றும் இறைவன் உங்களுடன் இருக்கின்றான் என்றும் வாதம் செய்துள்ளீர்கள். நவாப் சித்தீக் ஹஸன் கான் சாஹிப் அவர்கள் முஸ்லிமாக இருக்கின்றார். இன்றைய நாட்களில் அவருக்கு மிகப்பெரும் அவமரியாதை ஏற்பட்டுள்ளது. உங்களது துஆக்கள் இறைவனால் ஏற்றுக் கொள்ளப்படுகிறது என்றால் அல்லாஹ் இவரை காப்பாற்ற வேண்டும் என இவருக்காக நீங்கள் ஏன் துஆ செய்யவில்லை? என்று அக்கடிதத்தில் லேக்ராம் கேட்டிருந்தார்.

ஹஸ்ரத் மஸீஹ் மவ்வூது (அலை) அவர்கள் நவாப் சித்தீக் ஹஸன் கான் சாஹிபிற்காக துஆ செய்தார்கள். அல்லாஹ் ஹஸ்ரத் மஸீஹ் மவ்வூத் (அலை) அவர்கள் மூலமாக அவரது கண்ணியத்தைப் பாதுகாத்து சிறப்பை வழங்கினான். இழந்த கண்ணியத்தை அவர் மீண்டும் பெற்றார்.

முன்ஸி இலாஹி பக்ஸ் சாஹிப் என்ற கணக்கர் ஒருவர் இருந்தார். இவர் ஆரம்பத்தில் ஹஸ்ரத் மஸீஹ் மவ்வூது (அலை) அவர்கள் மீது மிகுந்த பற்றுள்ளவராக இருந்தார். எதுவரையென்றால், ஹஸ்ரத் மஸீஹ் மவ்வூது (அலை) அவர்களின் கால்களை அமுக்கி விடுவதை தனக்கு கண்ணியத்தை தரக்கூடிய ஒரு செயலாக அவர் கருதி வந்தார். ஆனால் பின்னர் இவர் ஹஸ்ரத் மஸீஹ் மவ்வூது (அலை) அவர்களின்

எதிரியாக மாறி விட்டார். ஹஸ்ரத் மஸீஹ் மவ்வூது (அலை) அவர்களுக்கு எதிராக மிகவும் தரங்கெட்ட சொற்களை இவர் கூற ஆரம்பித்தார். மிர்ஸா சாஹிபின் இல்ஹாம்கள் பொய்யானவை என்றும் கூற ஆரம்பித்தார். ஹஸ்ரத் மஸீஹ் மவ்வூது (அலை) அவர்கள் தொடர்பாக தனக்கு இறங்கிய இல்ஹாம்கள் பற்றியும் அவர் கூறியிருந்தார். ஹஸ்ரத் மஸீஹ் மவ்வூது (அலை) அவர்கள் அரசாங்கத் துறையிடம் தனக்கு எதிராக எவ்வித வழக்கும் தொடர்ந்துவிடக்கூடாது என்ற அச்சத்தில் தனக்கு இறங்கியுள்ளதாக அவர் கூறிய இல்ஹாம்களை அவர் அச்சிட்டு வெளியிடாமல் இருந்து வந்தார். ஹஸ்ரத் மஸீஹ் மவ்வூது (அலை) அவர்கள், அவரிடம் நீங்கள் கவலைப்பட வேண்டாம். நீங்கள் எந்த இல்ஹாமை வெளியிட விரும்பினாலும் அதை வெளியிடலாம். என்னைப் பற்றி என்ன கூற விரும்புகின்றீர்களோ அதை கூறலாம். உறுதியாக நான் உங்களுக்கு எதிராக எந்த வழக்கையும் தொடரமாட்டேன் என்று கூறினார்கள். இதுபற்றி ஹஸ்ரத் மஸீஹ் மவ்வூது (அலை) அவர்கள் இவ்வாறு கூறினார்கள்:

எனக்கு விண்ணிலிருந்து இறங்கும் தீர்ப்பு தேவைப்படுகிறது. அதன் மூலமாக உண்மையிலேயே மக்களுக்கு பலன்தரக்கூடிய ஒரு உண்மையாளரை மக்கள் புரிந்து நேர்வழியில் நிலைபெற்றுவிட வேண்டும் என்பதே நமது நோக்கமாகும். அதன் மூலம் இறைவன் புறமிருந்து உண்மையிலேயே இமாமாக அனுப்பப்பட்டுள்ள ஒருவரை மக்கள் அடையாளங்கண்டு கொள்ள வேண்டும். இதுவரை அந்த நபர் யார் என்பது யாருக்கு தெரியும்? இறைவனுக்குதான் அவர் யார் என்பது தெரியும் அல்லது எவர்களுக்கு அல்லாஹ் அகப்பார்வையை வழங்கியுள்ளானோ அவர்களுக்கு அவர் யார் என்பது தெரியும். எனவே, இதற்கான வழிமுறை என்னவென்றால் நான் பொய்யன் என்பது தொடர்பாக முன்ஸி இலாஹி பக்ஸ் சாஹிப் அவர்களுக்கு இறங்கியுள்ள எல்லா இல்ஹாம்களையும் அவர் வெளியிட வேண்டும்.

முன்ஷி சாஹிபிற்கு இறங்கியுள்ள இல்ஹாம்கள் உண்மையிலேயே இறைவனிடமிருந்து அவருக்கு இறங்கியுள்ளது என்றால் என்னைப் பற்றி அவருக்கு இறங்கியுள்ள இல்ஹாம்களை அவர்கள் வெளியிடுவதன் மூலம் அவை தனது உண்மையின் அற்புதத்தை வெளிப்படுத்தும். நிச்சயமாக அவர் அந்த இல்ஹாம்களை வெளியிட்ட பிறகு எனக்கு அழிவு ஏற்பட வேண்டும். இவ்வாறு கருணை காட்டப்பட வேண்டிய இந்த மனிதயினம் ஒரு பொய்யனிடமிருந்து விடுபட்டு இரட்சிப்பைப் பெற முடியும். முன்ஷி சாஹிப் வாக்களிக்கப்பட்ட மஸீஹ் என்ற எனது இந்த வாதம் இட்டுக்கட்டிக் கூறப்படும் பொய் என்று கருதுவதாயிருந்தால் நான் எனது வாதத்தில் பொய்யனாக இருக்கும் பட்சத்தில் கண்டிப்பாக எனக்கு அழிவு ஏற்படும். இறைவனது பார்வையில் நான்தான் அந்த வாக்களிக்கப்பட்ட மஸீஹ் என்றால் இறைவன் எனது உண்மைக்கு சாட்சி கூறுவான். என் தரப்பிலிருந்தும் உங்களுக்கு எவ்வித அவமரியாதையும் ஏற்படாது என்றும் உங்களது கண்ணியத்தின் மீது நான் தாக்குதல் நடத்தமாட்டேன் என்றும் நான் உங்களுக்கு வாக்குறுதி அளிக்கின்றேன். இறைவனிடத்தில் நான் ஒன்றை மட்டுமே கேட்பேன். நான் இட்டுக்கட்டிப் பொய் கூறாதவனாக இருந்து என் மீது அநியாயமான பொய்யான குற்றச்சாட்டுகளுடன் கூடிய தாக்குதல் நடத்தப்பட்டிருந்தால் நான் குற்றமற்றவன் என்பதையும் முன்ஷி சாஹிப் தான் பொய்யர் என்பதையும் நிரூபிப்பதற்கு இறைவன் தானாகவே ஒரு அடையாளத்தை இறக்கட்டும் என்றே நான் அந்த இறைவனிடம் கேட்பேன். ஏனென்றால், தான் குற்றமற்றவர் என நிரூபிக்கப்படுவதை விரும்புவது நபிமார்களின் நடைமுறையாக இருந்திருக்கின்றது. ஹஸ்ரத் யூசுஃப் (அலை) அவர்களும் தான் குற்றமற்றவர் என்று நிரூபிக்கப்பட வேண்டும் என விரும்பியுள்ளார்கள்.

இதற்கு பிறகு முன்ஷி இலாஹி பக்ஸ் சாஹிப் அவர்கள் 400 பக்கங்களைக் கொண்ட ஒரு நூலை எழுதினார். அதில் அவர் தனக்கு இறங்கிய இல்ஹாம்களை எழுதினார். அதில் அவர் தனக்கு இவ்வாறு இல்ஹாம் வந்ததாக அவர் எழுதினார்.

உனக்காக ஸலாம் இருக்கின்றது. நீர் வெற்றி பெறுவீர். அவர் மீது (அதாவது ஹஸ்ரத் மஸீஹ் மவ்வூது (அலை) அவர்கள் மீது) கோபம் இறங்குகிறது. மேலும் அவர் கண்டிப்பாக அழிந்து விடுவார். ஆயிரக்கணக்கான எதிரிகள் விரும்புவது போன்றே மிர்ஸா சாஹிப் அழிக்கப்படுவார். பிளேக் நோய் இறங்கும். அப்போது அவர் (ஹஸ்ரத் வாக்களிக்கப்பட்ட மஸீஹ் (அலை) அவர்கள்) தனது ஜமாஅத்துடன் சேர்ந்து பிளேக் நோயால் பாதிக்கப்படுவார். இறைவன் இந்த அநியாயக்காரர்கள் மீது அழிவை இறக்குவான்.

தொடர்ந்து முன்ஷி இலாஹ் பக்ஸ் சாஹிப் அவர்கள் இவ்வாறு எழுதுகின்றார்:

என்னிடம் ஒப்படைக்கப்பட்டுள்ள தொண்டை நான் செய்து முடிக்காத வரை நான் ஒருபோதும் மரணிக்கமாட்டேன்.

ஆக, இவைதான் அவருக்கு இறங்கிய இல்ஹாமாக இருந்தது.

அஸாயே மூஸா என்ற ஒரு நூலை அவர் எழுதியிருந்தார். அதில் தனது இல்ஹாம்களை எழுதி ஒரு சவாலாக அதனை ஹஸ்ரத் மஸீஹ் மவ்வூது (அலை) அவர்களுக்கு அனுப்பி வைத்தார். அவருக்கு இறங்கிய இல்ஹாம்களின் அடிப்படையில் அவரது உண்மைக்கு அவர் எடுத்துக்கூறிய எந்த அளவுகோலும் அவருக்கு பொருந்தவில்லை.

அவர் தனது ஒரு நண்பரின் ஜனாஸாவில் கலந்து கொள்ள சென்ற சமயத்தில் அங்கிருந்து அவருக்கு பிளேக் நோய் ஏற்பட்டது. அவரது அந்த நண்பரும் பிளேக் நோயால் தான் மரணமடைந்திருந்தார். பிறகு முன்ஷி இலாஹி பக்ஸ் அவர்களும் பிளேக் நோயால் பாதிக்கப்பட்டு 1907 ஆம் ஆண்டு மரணமடைந்தார். பத்திரிகைகளும் அந்தோ பரிதாபம்! அஸாயே மூஸா என்ற நூல் எழுதியவரும், பிளேக் நோயால் பாதிப்புக்குள்ளாகி ஷஹீதாகிவிட்டார் என்று செய்தி வெளியிட்டது.

தொடர்ந்து 11 வருடங்களாக பிளேக் நோயின் தாக்குதல் இருந்து வந்த பிறகும் கூட ஹஸ்ரத் மஸீஹ் மவ்வூது (அலை) அவர்களும், அவர்களது வீட்டைச் சார்ந்தவர்களும் அவர்களது ஜமாஅத்தில் இணைந்தவர்களும் பிளேக் நோயின் தாக்குதலிலிருந்து தப்பித்தவாறு இறைவனின் பாதுகாப்பின்கீழ் இருந்தார்கள். இன்று நாம் பார்ப்பது போன்று ஹஸ்ரத் மஸீஹ் மவ்வூது (அலை) அவர்களின் ஜமாஅத் அல்லாஹ்வின் உதவிகளுடன் முழு உலகிலும் கோடிக்கணக்கான மக்களை தன்னுடன் இணைத்தவாறு பரவிக் கொண்டிருக்கிறது. ஆனால், முன்ஷி இலாஹி பக்ஸ் சாஹிப் அவர்களைப் பற்றி பெயர் சொல்லக்கூட ஒரு நபரும் இல்லை.

ஹஸ்ரத் மஸீஹ் மவ்வூது (அலை) அவர்களின் நெருங்கிய உறவினர்களான மிர்ஸா நிஸாமுத்தீன், மிர்ஸா இமாதுத்தீன் ஆகியோரும் ஹஸ்ரத் மஸீஹ் மவ்வூது (அலை) அவர்கள் மீது கொண்ட பகைமையின் காரணமாக இஸ்லாத்தையே எதிர்த்து நின்றவாறு இந்துக்களுடன் சேர்ந்து ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களுக்கு எதிராக அவதூறான விஷயங்களைக் கூறி வந்தனர். மாறாக, பண்டிட் லேக்ராம் காதியானில் தங்குவதற்கான ஏற்பாட்டையும் அவர்கள் செய்தார்கள். அவர் இரண்டு மாதங்கள் காதியானில் தங்கினார். ஹஸ்ரத் மஸீஹ் மவ்வூது (அலை) அவர்களுக்கு தொல்லை தரும் எந்தவொரு சந்தர்ப்பத்தையும் அவர்கள் நழுவவிட்டதேயில்லை. ஹஸ்ரத் மஸீஹ் மவ்வூது (அலை) அவர்களை சந்திப்பதற்காக ஜமாஅத் சகோதரர்கள் வரும்போது அவர்களை வராமல் தடை செய்யும் விதத்தில் வழிப்பாதையை அடைந்து ஒரு சுவரை அவர்கள் எழுப்பினார்கள். இறுதியில் எவ்வகையிலும் அவர்கள் தமது இந்த செயலிலிருந்தும் விலகாமல் இருந்ததால் ஹஸ்ரத் மஸீஹ் மவ்வூது (அலை) அவர்கள் இவர்களுக்கு எதிராக வழக்கு தொடர்ந்தார்கள். தனது எதிரிகள் மீது ஹஸ்ரத் மஸீஹ் மவ்வூது (அலை) அவர்கள் தொடுத்துள்ள ஒரே வழக்கு இந்த ஒரு வழக்கு மட்டுமேயாகும். அதுவும்கூட ஜமாஅத்திலுள்ள நபர்களுக்கு எவ்வித கஷ்டமும் இருக்கக்கூடாது என்பதற்காக அவர்கள் அவ்வாறு செய்தார்கள். இதற்காக அவர்கள் அதிகமாக துஆ செய்தார்கள். பிறகு அரபியில் அவர்களுக்கு இது தொடர்பாக இவ்வாறு இல்ஹாம் இறங்கியது.

உம்மை வியப்பில் ஆழ்த்தக்கூடிய ஒரு விஷயம் உருவாகும். உயர்வான வானங்களின் இறைவனின் வஹியாக இது இருக்கின்றது. தனது நேர்மையான அடியார்களுடன் பரிமாறும்விதத்தில் உமது இறைவன் நேரான வழியை ஒருபோதும் கைவிடமாட்டான். உதவிக்கு தகுதியுடைய தனது அடியார்களை ஒருபோதும் அவன் மறக்க மாட்டான். உமக்கு இந்த வழக்கில் மிகத்தெளிவான வெற்றி கிடைக்கும். ஆனால், இறைவன் நிர்ணயித்துள்ள அந்த நேரம் வரை இவ்வழக்கின் தீர்ப்பு தாமதம் ஏற்படும்.

இறுதியில் இந்த வழக்கில் வெற்றி பெறுவதற்கான நம்பிக்கையற்ற நிலை ஏற்பட்ட சமயத்தில் ஒரு முக்கியமான தாள் Record -லிருந்து கிடைத்தன் விளைவாக இந்த வழக்கின் தீர்ப்பு ஹஸ்ரத் மஸீஹ் மவ்வூது (அலை) அவர்களுக்கு சாதகமாக அமைந்தது. சுவரும் இடிக்கப்பட்டது. ஹஸ்ரத் மஸீஹ் மவ்வூது (அலை) அவர்கள் விரும்பினால் இவர்கள் மீது வழக்கு தொடர்ந்து case -ற்காக அவர்கள் செலவழித்த முழுத் தொகையையும் இவர்களிடமிருந்து வசூல் செய்து கொள்வதற்கு நீதிபதி அனுமதி வழங்கியிருந்தார். ஹஸ்ரத் மஸீஹ் மவ்வூது (அலை) அவர்கள், அவர்கள்மீது வழக்கு தொடரவில்லை. ஆனால், அவர்களது வக்கீல் இவர்கள் மீது வழக்கு தொடுத்தார். எந்த நாளில் நீதிமன்றத்திலிருந்தும் Notice வந்ததோ அந்த நாளில் ஹஸ்ரத் மஸீஹ் மவ்வூது (அலை) அவர்கள் காதியானுக்கு வெளியே எங்கோ சென்றிருந்தார்கள். Notice வந்த சமயத்தில் அதற்கு முன்னரே மிர்ஸா இமாமுத்தீன் வஃபாத் ஆகியிருந்தார். Notice மிர்ஸா நிஸாமுத்தீனிடம் கொடுக்கப்பட்டது. இல்ஹாமில் குறிப்பிட்டிருந்தபடி அவரது நிலை மிகவும் மோசமாக ஆகி விட்டது. 143 ரூபாய் செலுத்தும்படி Notice -ல் குறிப்பிடப்பட்டிருந்தது. அதை கொடுக்க அவரிடம் எதுவும் இருக்கவில்லை. அப்போது அவர்கள் ஹஸ்ரத் மஸீஹ் மவ்வூது (அலை) அவர்களிடம் சென்று நாங்கள் உங்களது உறவினர்களாக இருக்கின்றோம். கொஞ்சம் எங்களது நிலைமையை கருத்தில் கொள்ள வேண்டும் என்று கேட்டார்கள். ஹஸ்ரத் மஸீஹ் மவ்வூது (அலை) அவர்கள் நான் உங்களுக்கு எதிராக எந்த வழக்கும் தொடரவில்லை என்று கூறி விட்டு இவர்கள் தங்களது எண்ணத்திற்கேற்ப என்னை அவமதிக்க முயற்சி செய்தாலும் இப்போது வழக்கின் தீர்ப்பு கூறப்பட்டு விட்டதால் நமது நோக்கம் நிறைவேறி நமக்குரிய இடமும் கிடைத்து விட்டது. எனவே, இவர்களை எவ்விதத்திலும் பழிவாங்கக் கூடாது என்று எழுதிக் கொடுத்தார்கள். இதுதான் எதிரிகளின் எதிர்ப்புக்கும் பகைமைக்கும் எதிரில் அவர்கள் காட்டிய நல்லொழுக்கமாகும்.

**ஹஸ்ரத் மஸீஹ் மவ்வூது (அலை) அவர்கள் கூறுகின்றார்கள்:**

அந்தோ! நமது எதிரிகள் தமது முயற்சிகளில் தொடர்ந்து தோல்வியைத் தழுவிய பிறகும்கூட இந்த நபருக்கு பின்னால் ஒரு மறைவான கை செயல்பட்டுக் கொண்டிருக்கின்றது என்று என்னைப் பற்றி அவர்களால் உணர்ந்து கொள்ள முடியவில்லை. அந்த மறைவான கைதான் என்னை எல்லா தாக்குதல்களிலிருந்தும் பாதுகாத்துள்ளது. அவர்களிடம் துர்பாக்கிய நிலை இல்லாமல் இருந்தால் இது அவர்களுக்கு ஒரு அற்புதமாக இருந்திருக்கும். இவர்களது ஒவ்வொரு தாக்குதலின் போதும் இறைவன் இவர்களது தீங்கிலிருந்தும் என்னை காப்பாற்றினான். அதுமட்டுமல்ல. அவன் என்னை காப்பாற்றுவான் என்பதைப் பற்றி முதலிலேயே எனக்கு தெரிவித்துமிருக்கின்றான்.

**ஹஸ்ரத் மஸீஹ் மவ்வூது (அலை) அவர்கள் கூறுகின்றார்கள்:**

இது மிகவும் வியப்பிற்குரிய ஒரு வி-யமாகும். எவராவது இந்த இரகசியத்தை புரிந்து கொள்ள முடியுமா? அவர்களின் எண்ணத்திற்கேற்ப நானோ பொய்யனாகவும், தஜ்ஜாலாகவும், இறைவன் மீது இட்டுக்கட்டி பொய் கூறுபவனாகவும் இருக்கின்றேன். ஆனால், முபாஹலாவின்போது இவர்கள்தான் மரணிக்கின்றார்கள். என்ன இறைவனும் என்னை பற்றி தவறாக புரிந்து செயல்படுகின்றானா? நஊதுபில்லாஹ். அப்படிப்பட்ட நல்ல மனிதர்கள் மீது ஏன் இறைவனின் கோபம் இறங்கியிருக்கின்றது? அவர்கள் இழிவடைந்து மரணமடைகின்றனர்.

**ஹஸ்ரத் வாக்களிக்கப்பட்ட மஸீஹ் (அலை) அவர்கள் கூறுகின்றார்கள்:**

எல்லா வகையிலும் மௌலவிமார்களிடமிருந்து தடைகள் ஏற்படுத்தப்பட்டது. மக்கள் அதிகமாக என் பக்கம் திரும்பி விடக்கூடாது என்பதற்காக அவர்கள் அதகிமாக முயற்சிகளை செய்தார்கள். எதுவரையென்றால் மக்காவிலிருந்து ஃபத்வா (மார்க்கதீர்ப்பு) கேட்கப்பட்டது. ஏறக்குறைய 200 மௌலவிமார்கள் எனக்கெதிராக நான் காபிர் என்று ஃபத்வா கொடுத்தார்கள். நான் கொலை செய்யப்படுவதற்கு தகுதியானவன் என்று என்னை பற்றி அவர்கள் ஃபத்வா வெளியிட்டார்கள். ஆனால், அவர்கள் தங்களது அனைத்து முயற்சிகளிலும் தோல்வியை தழுவினார்கள். இந்த பணி மனிதனால் செய்யப்படும் பணியாக இருந்திருந்தால் நீங்கள் என்னை

எதிர்க்க வேண்டிய தேவையேயில்லை. என்னை அழிப்பதற்காக இந்த அளவு நீங்கள் கஷ்டப்பட வேண்டிய தேவையேயில்லை. மாறாக, என்னை அழிப்பதற்கு இறைவனே போதுமானவனாக இருக்கின்றான்.

ஹஸ்ரத் மஸீஹ் மவ்வூத் (அலை) அவர்களுக்கு இறைவனின் காஃபி (போதுமானவன்) என்ற பண்பின் மீது எந்த அளவு உறுதியான நம்பிக்கை இருந்தது என்றால் இந்த வி-யத்தில் அல்லாஹ் எனக்கு உதவாமல் இருந்து விடுவானோ? என்று துளியளவுகூட அவர்களுக்கு இறைவன் மீது சந்தேகம் வந்ததேயில்லை. அதே சமயத்தில் துஆ அவசியமானதாகும். எனவே, துஆவின் பக்கம் அவர்களுக்கு கவனம் இருந்து வந்தது. இவை நபிமார்களுக்கே உரிய சிறப்பு தண்மையாகும்.

ஒரு அரபியிடமிருந்து வாக்களிக்கப்பட்ட மஸீஹ் (அலை) அவர்களுக்கு கடிதமொன்று வந்தது. அதில் அவர் ஓராயிரம் ரூபய் எனக்கு அனுப்பி தந்து உங்களது பிரதிநிதியாக என்னை இங்கு நியமித்தால் நான் உங்களது பிரச்சாரத்தை பரப்புவேன் என்று எழுதியிருந்தார். இதை படித்த ஹஸ்ரத் மஸீஹ் மவ்வூத் (அலை) அவர்கள் எந்த பிரதிநிதியும் நியமிக்க வேண்டிய தேவையில்லை. நமது ஒரேயொரு பிரதிநிதிதான் கடந்த 23 வருடங்களாக நமது பிரச்சாரத்தை பரப்புகின்றான். அந்த இறைவன் இருக்கும்போது வேறு யாருடைய தேவையும் நமக்கு இல்லை. மேலும் அந்த இறைவன் அலை ஸல்லாஹு பி காஃபின் அப்தஹு என்று நம்மிடம் கூறியுமுள்ளான் என்று அந்த நபருக்கு கடிதம் எழுதும்படி கூறினார்கள்.

**ஹஸ்ரத் வாக்களிக்கப்பட்ட மஸீஹ் (அலை) அவர்கள் கூறுகின்றார்கள்:**

நமது சில கண்ணியமிக்க நண்பர்கள் மார்க்கத்தின் மீது கொண்ட அன்பில் தங்களது அளவு கடந்த நேசத்தை செளிப்படுத்தக்கூடியவர்களாக இருக்கின்றார்கள். இப்படிப்பட்ட பெரிய நூலை எழுதி அதற்காக ஆயிரக்கணக்கில் செலவு செய்வது பொருத்தமற்ற செயல் என்று என் மீது ஆட்சேபனை செய்யும் இவர்கள் மனிதன் என்ற நிலையில் அவர்களது உள்ளம் கூறுவதை வெளிப்படுத்திவிட்டார்கள். நாம் இவர்களிடம் கூறிக்கொள்வது என்னவென்றால் இப்படிப்பட்ட நுற்றுக்கணக்கான நுட்பமான ஞானங்களையும், உண்மைகளையும் நாம் வெளிப்படுத்தாமல் இருந்திருந்தால், மேலும் அதனால் புத்தகத்தின் எடை அதிகமாகிவிடும் என்று கருதுவதாயிருந்தால் இறைவனது வேதநூல் தொடர்பாகவும் அது பொருத்தமற்ற ஒன்று என்று நாம் கூறவேண்டியது வரும். இதற்காக இந்த அளவு பணம் எங்கிருந்து கிடைக்கும்? என்ற கேள்வியை பொறுத்தவரை இதை வைத்து நமது நண்பர்கள் நம்மை அச்சுறுத்த வேண்டாம் என்று நான் கேட்டு கொள்கின்றேன். நமக்கு நமது வல்லமைமிக்க கருணைமிக்க எஜமானனான இறைவன் மீது இதைவிட அதிகமாக எதிர்பார்ப்பும் நம்பிக்கையும் இருக்கின்றது என்பதை உறுதியாக நீங்கள் நம்ப வேண்டும். அதிகமான செல்வங்களை பெட்டகங்களில் வைத்து அதன் சாவியை தன்னிடம் வைத்திருக்கும் நபருக்கு அந்த செல்வத்தின்மீது எந்த அளவு நம்பிக்கை இருக்குமோ அதைவிட அதிகமாக ஆற்றல்மிக்க இறைவன் தனது மார்க்கத்திற்காகவும் தனது ஏகத்துவம் நிலைநாட்டப்படுதற்கும் தனது அடியானுக்கு உதவி செய்வதற்கும் எப்போதும் தயாராக இருக்கின்றான் என்பதில் நம்பிக்கை இருக்கின்றது. **அலம் தஃலமு அன்னல்லாஹா அலா துல்லி ஸய்யின் கதீர்** (பொருள்: அல்லாஹ் எல்லாவற்றின் மீதும் ஆற்றல் மிக்கவன் என்பதை நீர் அறியவில்லையா?)

ஹஸ்ரத் வக்களிக்கப்பட்ட மஸீஹ் (அலை) அவர்களின் மரணத்திற்கு பிறகுகூட ஜமாஅத்திற்கு எதிராக எப்படிப்பட்ட குழப்பங்கள் தலைதூக்கினாலும் அதன் தீய விளைவுகளிலிருந்து அல்லாஹ் ஜமாத்தை பாதுகாத்துள்ளான். பல்வேறு எதிர்ப்புகளுக்கிடையில், அரசாங்கத்தின் அடக்குமுறைகளுக்கு எதிரில் அல்லாஹ் ஜமாஅத்திற்கு வழங்கியுள்ள வசதிகளில் எந்த அளவு அருள் செய்துள்ளான் என்றால் அது உலகிற்கு மிகப்பெரியதாக தோற்றமளிக்கின்றது.

கடந்த சுற்றுப்பயணத்தின் போது பெனினிலுள்ள அந்நாட்டின் PRESIDENT ஐ நன் சந்தித்தபோது அவருக்கு தமது நட்டில் மக்கள் அதிகமான முதலீடுகளை (INVESTMENT) போடவேண்டும் என்ற ஆர்வம் இருப்பதை நான் உணர்ந்தேன். உலகவாதியான அவர் என்னிடம் முதலாவது கேட்ட கேள்வி ஜமாஅத்

எங்களது இந்த நாட்டில் எத்தனை மில்லியன் டாலர் முதலீடு செய்யும்? என்பதாகும். எனவே, ஜமாஅத் தொடர்பாக அவர்களுக்கு பெரும் எதிர்பார்புகள் உள்ளன. உண்மையில் அல்லாஹ்வின் கைகள் நம்முடன் இருக்கின்றது. நமது ஒவ்வொரு பணியிலும், முயற்சியிலும் அவனே நமக்கு போதுமானவனாக இருக்கின்றான். இது இஸ்லாத்தின் அந்த உயிருள்ள இறைவனின் அடையாளமாகும். அவன் இவ்வாறு அறிவித்துள்ளான்:

**வல்லாஹு அஃலமு அஃதாயிகும் வ கஃபா பில்லாஹி வலிய்யன் வ கஃபா பில்லாஹி நஸீரா** - அல்லாஹ் உமது எதிரிகளை எல்லாரையும் விட அதிகமாக நன்கு அறிந்தவனாக இருக்கின்றான். அல்லாஹ் நண்பனாக இருப்பதில் உமக்கு போதுமானவனாக இருக்கின்றான். உமக்கு உதவி செய்வதற்கும் போதுமானவனாக இருக்கின்றான்.

இங்கு நான் இன்னொரு வி-யத்தையும் தெளிவுபடுத்த விரும்புகின்றேன். கடந்த குத்பாவில் நான் பஹாவுல்லாஹ் பற்றி கூறியிருந்தேன். நபி என்று வாதம் செய்த நிலையில் ஒருவர் எழுந்தார் என்று அவரை பற்றி நான் கூறியிருந்தேன். தம்மை நபி என்று அவர் வாதம் செய்தாலும்கூட அவருடன் அல்லாஹ்வின் உதவி இருக்கவில்லை என்று நான் கூறியிருக்க வேண்டும். பஹாயி literature -களில் அவரைப் பற்றி நபி என்ற எந்த குறிப்பும் இல்லை என்று கூறுவது தவறாகும். ஏனென்றால், அவரது சந்ததிகளில் பலரும் அவரைப் பற்றி நபியாக இருந்தார் அல்லது இறைநேசராக இருந்தார் என்றெல்லாம் கூறி வந்துள்ளார்கள். அவர் தன்னைப் பற்றி நான் இறைவன் என்றும் வாதம் செய்துள்ளார்.

உண்மையில் வெளியிடப்படாமல் மறைக்கப்பட்டு வரும் பஹாவுல்லாஹ்வின் ஷரீஅத்தில் அவர் தன்னைப் பற்றி நானே இறைவன் என்று வாதம் செய்திருப்பது தெரிகின்றது. அவர் நபித்துவ வாதம் செய்யவில்லையென்றாலும் நான் ஏற்கனவே கூறியது போன்று தன்னைப் பற்றி நபி என்று அவர் வாதம் புரிந்திருந்தாலும் கூட அல்லாஹ்வின் உதவி அவருடன் இருக்கவில்லை. இன்றைய நாட்களில் அஹ்மதிகளை பஹாயிகளுடன் இணைத்துப் பேசப்படுவதால் இதை நான் கூறுகின்றேன்.

அக்தஸ் என்ற தனது ஷரீஅத்தில் தானே இறைவன் என்று அவர் வாதம் செய்திருப்பது இடம்பெற்றுள்ளது. சில அஹ்மதிகள் கூட இப்படிப்பட்டவர்களது தீய தாக்கத்திற்கு ஆளாகி விடுவதால் இதைப் பற்றியும் நான் விளக்கிக் கூறி விடுகிறேன்.

பஹாவுல்லாஹ் நான் இறைவன் என்று வாதம் செய்தார். நபி என்று அவர் வாதிக்கவில்லை. இது பஹாயி Literature-லிருந்து நமக்கு தெரிய வருகிறது. தனக்குப் பிறகு தனது பிரதிநிதியாக அவர் நியமித்த அவருடைய மகனும் பஹாவுல்லாஹ் தன்னை இறைவன் என்று கூறி வந்தார் என்றே அவரைப் பற்றி கருதி வந்துள்ளார். முதலில் அவரது இறைத்தன்மை பற்றி கூறாமல் மக்களை தங்களது வலையில் சிக்க வைத்த பிறகே இதைப் பற்றி அவர்கள் கூறுகின்றார்கள். பஹாவுல்லாஹ்வின் ஷரீஅத்திற்கு ஏற்ப அவர் மனிதராகவும் இருந்தார். இறைவனாகவும் இருந்தார். ஷரீஅத்தை இறக்குபவரும் அவர்தான். அந்த ஷரீஅத்தைப் பெற்றுக் கொள்பவரும் அவரேதான். கிறிஸ்தவர்கள் கூறுவது போன்று அவர்களை மகிழ்விப்பதற்காக இவர்கள் ஹஸ்ரத் ஈஸா (அலை) அவர்களை தேவகுமாரன் என்று நம்புகின்றனர். பஹாவுல்லாஹ் ஒரு நீண்ட காலம் சிறையில் இருந்திருக்கின்றார். அவர் இவ்வாறு எழுதியுள்ளார்:

நான் சிறையில் இருக்கின்றேன். நான் வானங்களின் எஜமானனாக இருக்கின்றேன். என்னைத் தவிர வேறு எந்த இறைவனும் இல்லை. சிறையில் அடைபட்டுள்ள இந்த இறைவன் வானங்களின் எஜமானனாகவும் இருக்கின்றார்.

பஹாவுல்லாஹ் இவ்வாறு எழுதியுள்ளார்: தனிமையில் கைதியாக இருக்கின்ற என்னைத் தவிர வேறு எந்த இறைவனும் இல்லை.

பிறகு எழுதுகின்றார்: நான் மரணித்த பிறகும்கூட உங்களுக்கு உதவி புரிந்து வருவேன்.

மரணிக்கும் இந்த இறைவனால் என்ன உதவி செய்ய முடியும்? இவரது பிரதிநிதியாக இருந்து வந்த அப்துல் பஹா என்பவர் பஹாயிகளின் எண்ணிக்கை எவ்வளவு என்பதைப் பற்றி குறிப்பிட்டவாறு இவ்வாறு கூறுகின்றார்:

கிறிஸ்தவர்கள் பஹாயிகளாக மாறிவிடலாம். அல்லது யூதர்கள் பஹாயிகளாக மாறி விடலாம். Free Mason –ஐச் சேர்ந்தவர்கள் அல்லது முஸ்லிம்கள் பஹாயிகளாக மாறி விடலாம்.

அதாவது ஒவ்வொரு மதத்திற்குச் சென்ற பிறகும்கூட ஒருவர் பஹாயி ஆகலாம். ஒவ்வொரு மதத்தின் போதனைகளுக்கு ஏற்ப முதலில் அவர்களுக்கு மெதுமெதுவாக புரிய வைத்து அவர்களை தங்களுக்கு அருகில் கொண்டு வந்த பிறகு பஹாவுல்லாஹ்தான் இறைவன் என்ற வாதத்தை அவர்கள் மற்றவர்களுக்கு எட்ட வைக்கின்றார்கள். அல்லாஹ் நபிமார்களை உலகிற்கு அனுப்பும்போது எனது இந்த தூதுச் செய்தியை உலகிற்கு எட்ட வையுங்கள் என்ற போதனையுடன்தான் அவர்களை அனுப்புகின்றான். ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களை உலகிற்கு அனுப்பிய சமயத்திலும் முழு உலகிற்கும் எனது இந்த தூதுச் செய்தியை எட்ட வையுங்கள் என்றே இறைவன் அவர்களிடம் கூறினான்.

ஆனால் இவர்களோ இந்த தூதுச் செய்தியை உலகிற்கு எட்ட வைக்காமல் இருக்க வேண்டும் என்று பஹாயிகளே எழுதி வைத்துள்ளார்கள்.

அவர்கள் கூறுகின்றார்கள்:

இந்த நாடுகளில் தப்லீக் செய்வதை பஹாவுல்லாஹ் ஹராமென்ற கூறியுள்ளார். சிறிது காலம் வரை முற்றிலும் அமைதியாக இருந்து விட்டு அதைப் பற்றி யாராவது கேள்வி கேட்டாலும் அதுபற்றி முழுமையாக தனக்கு தெரியாது என்று கூற வேண்டும். பாலஸ்தீனத்திலும் இதுபோன்ற மற்ற நாடுகளிலும் இவர்கள் முற்றிலும் அமைதியாக இருந்து விடுகின்றார்கள்.

பிறகு ஒவ்வொரு மனிதனின் இயல்புக்கு ஏற்ப இவர்களது தப்லீக் இருக்கின்றது. ஹஸ்ரத் இரண்டாவது கலீஃபத்துல் மஸீஹ் அவர்களும் இது தொடர்பாக பல விஷயங்களை எழுதியுள்ளார்கள்.

அவர்கள் இங்கு (இலண்டன்) வந்த சமயத்தில் ஒரு ஆங்கிலேய பெண் ஈரானைச் சார்ந்த தனது தோழி ஒருவருடன் ஹஸ்ரத் கலீஃபத்துல் மஸீஹ் (ரலி) அவர்களை சந்திக்க வந்திருந்தார். அந்தப் பெண் பஹாயியாக மாறியிருந்தார்.

ஹஸ்ரத் இரண்டாவது கலீஃபத்துல் மஸீஹ் (ரலி) இந்த பெண் தொடர்பாக இவ்வாறு கூறுகின்றார்கள்:

திருக்குர்ஆன் முழுமையான ஷரீஅத்தின் வடிவத்தில் நமக்கு கிடைத்திருக்கின்றது. அவ்வாறிருக்க பஹாவுல்லாஹ் உங்களுக்கு என்ன புதிய விஷயத்தைக் கூறினார்? என்று நான் அந்த பெண்ணிடம் கேட்டேன். அதற்கு அவர் திருக்குர்ஆன் முழுமையாக ஷரீஅத் அல்ல. ஏனென்றால், நான்கு பேரை மணமுடிப்பது என்பது மனித இயல்புக்கு மாற்றமான விஷயமாகும். பஹாவுல்லாஹ்வோ ஒரு திருமணம்தான் செய்ய வேண்டும் என்று கூறுகின்றார் என்று அந்தப் பெண் கூறினாள்.

ஹஸ்ரத் இரண்டாவது கலீஃபத்துல் மஸீஹ் (ரலி) அவர்கள் அந்த பெண்ணிடம் பஹாவுல்லாஹ்வே இரண்டு பேரை திருமணம் செய்துள்ளாரே என்று கேட்டார்கள். சிலர் அவர் மூன்று பேரை திருமணம் செய்ததாக கூறுகின்றார்கள். அதற்கு அந்தப் பெண் பஹாவுல்லாஹ் தனது வாதத்திற்கு முன்புதான் இவ்வாறு திருமணம் செய்திருந்தார் என்ற கூறினார். அதற்கு ஹஸ்ரத் இரண்டாவது கலீஃபத்துல் மஸீஹ் (ரலி) அவர்கள் இந்த இறைவன் எப்படிப்பட்ட இறைவனாக இருக்கின்றான்? தான் இறைவன் என்று வாதித்து ஒரு புதிய ஷரீஅத்தை உருவாக்கப் போவதுகூட அவருக்கு தெரியவில்லை. சரி அது போகட்டும். அவர் தனது மகனுக்கு இரண்டு பேரை ஏன் திருமணம் செய்து வைத்தார்? என்று ஹஸ்ரத் இரண்டாவது கலீஃபத்துல் மஸீஹ் (ரலி) அவர்கள் கேட்டார்கள். அந்தப் பெண் ஈரானைச் சார்ந்த தனது தோழியிடம் பஹாவுல்லாஹ்வின் மகன் இரண்டு பேரை திருமணங்கள் செய்தாரா? என்று கேட்டார். அதற்கு அவரது தோழி ஆம் திருமணம் செய்தது

உண்மைதான். ஆனால், திருமணம் நடந்த மறுநாளே அவர்களில் ஒருவரை பஹாவுல்லாஹ்வின் மகன் தனது சகோதரியாக ஆக்கிக் கொண்டார் என்று பதில் கூறினார். ஹஸ்ரத் முஸ்லிஹ் மவ்வூது (ரலி) அவர்கள் அவ்வாறு ஒரு பெண்ணை அவர் சகோதரியாக ஆக்கிக் கொண்டார் என்றால் அவரிடமிருந்து பிள்ளைகளை பெற்றுக் கொள்வாரா? என்று கேட்டதும் முழு சபையில் அந்தப் பெண் மிகவும் வெட்கப்பட வேண்டிய நிலை ஏற்பட்டது.

எனவே, இதுதான் இவர்களது வாதமாக இருக்கின்றது. இவர்கள் மிகவும் அமைதியாக தமது தாக்குதலை நடத்துபவர்களாக இருப்பதால் மிகவும் எச்சரிக்கையுடன் இவர்களிடமிருந்து தப்பித்துக் கொள்ள வேண்டும்.

பஹாவுல்லாஹ் தனது ஷரீஅத்தை வெளியிடவில்லை. அதை மறைத்தே வைத்திருந்தார். அதை வெளிப்படுத்தக் கூடாது என்று கட்டளையிட்டார். நபிமார்கள் தொடர்பாக அல்லாஹ் அவர்கள் என் மீது இட்டுக்கட்டி எனது வசனங்கள் அவர்களுக்கு கிடைப்பதாக பொய் கூறினால் அவர்களை நான் பிடிப்பேன் என்று கூறியுள்ளான். அவர்களது உயிர்நாடியை துண்டித்து விடுவேன் என்றும் கூறுகின்றான். ஆனால் தன்னை இறைவன் என்று வாதிப்பவர்கள் தொடர்பாக அவர்களை நான் இவ்வுலகிலேயே பிடித்து தண்டித்து அவர்களை அழித்து விடுவேன் என்று கூறவில்லை. அல்லாஹ் கூறுகின்றான்:

**வமன் யகுல் மின்ஹும் இன்னி இலாஹுன் மின் தூனிஹி ஃப ஸாலிக் நஜ்ஸிஹி ஜஹன்னம கஸாலிக நஜ்ஸிஸ்ஸாலிமீன்** – அவர்களில் எவராவது இறைவனைத் தவிர நானும் வணக்கத்திற்குரியவனாக இருக்கின்றேன் என்று கூறினால் நாம் அவரை நரகத்தில் போடுவோம். அநீதியிழைப்பவருக்கு நாம் இவ்வாறே கூலி வழங்குகின்றோம்.

ஆக அல்லாஹ் தான் இறைவன் என்று வாதம் செய்பவருக்குரிய தண்டனையை அவ்வாறு வாதம் செய்தவரின் மரணத்திற்கு பிறகே வழங்குகின்றான். அல்லாஹ் உண்மையான நபிக்கு தனது உதவிகளை வழங்குகின்றான், அவர்களுக்காக அடையாளங்களை காட்டுகின்றான். தான் நபி என்று பொய்யாக வாதம் செய்பவரை பிடிக்கின்றான். இந்த உலகிலேயே அப்படிப்பட்ட பொய் வாதங்கள் செய்பவரை இழிவுபடுத்துகின்றான். ஆனால், தான் இறைவன் என்று வாதிப்பவர்களை மறுமையில் பிடிக்கின்றான். நரக நெருப்பு கிடைப்பதுதான் இறைவன் அவர்களுக்காக கூறும் தீர்ப்பாக இருக்கும்.

அல்லாஹ் நம்மை உண்மையான தவ்ஹீதில் நிலைநிற்பவர்களாகவும் தன்னால் அனுப்பப்பட்ட இறைதூதரை முழுமையாக பின்பற்றியவாறு அவருக்கு முழுமையாக கட்டுப்பட்டு நடப்பதற்குரிய தவ்ஃபீகை நமக்கு வழங்குவானாக. அல்லாஹ் அதன் மூலமாக தனது அருள் மற்றும் கருணையின் போர்வையில் எப்போதும் நம்மை போர்த்தி வைப்பானாக. மேலும் நம்மை இறைநெருக்கம் கிடைக்கப் பெற்றவர்களாக ஆக்கிக் கொண்டே செல்வானாக.

★ ★ ★ ★ ★

JUMUA KUTHBA
HADHRAT KHALIFATUL MASIH V
AT BAITUL FUTUH MOSQUE, LONDON
ON 30.01.2009

Translated by : **Maulavi M. RAFEEQ AHMAD H.A.**
Published by : **MAJLIS KHUDDAMUL AHMADIYYA**
ASHURA EAST STREET, MELAPALAYAM,
TIRUNELVELI – 627 005.
**TELEFAX : 0462 - 2352456**